இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 317 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 13 – வெள்ளிக்கிழமை 27 ஜுன் 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 317 : Thiruvalluvar Year - 2056 - Aani 13 - Friday 27 June 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00



## ஏழை, நடுத்தர மக்களைக் கவலைக்குள்ளாக்கும்

# இரயில் கட்டணங்களை உயர்த்த வேண்டாம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - பிரதமருக்கு வலியுறுத்தல்!

**சென்னை, ஜுன் 27 -**

**இரயில் கட்டண உயர்வு அறிவிப்பு குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிடுகையில் "இந்த அறிவிப்பு ஏழை, எளிய, நடுத்தர மக்களின் மகிழ்ச்சியைக் களவாடியுள்ளது எனவும், ஏற்கனவே விலைவாசி உயர்வு மற்றும் சிலிண்டர் விலை உயர்வினால் நடுத்தரக் குடும்பங்கள் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் கவலை மேலும் அதிகரிக்காதவாறு இரயில் கட்டணங்களை உயர்த்த வேண்டாம்" எனவும் பிரதமருக்கும், இரயில்வே அமைச்சருக்கும் வேண்டுகோள் விடுத்து வலியுறுத்தியுள்ளார்.**



இரயில் கட்டணங்கள் ஜுலை முதல் உயர்த்தப்படவுள்ளது தொடர்பான தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

இந்திய இரயில்வே என்பது ஏழை நடுத்தர மக்களின் பயணங்களுக்கானது மட்டுமல்ல; அது, அவர்களது அன்றாட வாழ்வில் ஓர் அங்கம்!

இன்று காட்பாடி செல்ல இரயில் நிலையம் வந்தபோது, என்னை அன்போடு வரவேற்ற மக்களிடம் பேசினேன். வழக்கமான உற்சாகமும் மகிழ்ச்சியும் குறைந்திருந்தது. ஜுலை முதல் உயர்த்தப்படவுள்ள இரயில் கட்டணங்களும் குறைந்து வரும் சாதாரண வகுப்புப் பெட்டிகளும் அவர்களது மகிழ்ச்சியைக் களவாடியுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களையும், மக்களின் சார்பாக நான் கேட்டுக்கொள்வது...

AC பெட்டிகள் உயர்த்த வேண்டும் எனச் சாதாரண வகுப்புப் பெட்டிகளைக் குறைக்க வேண்டாம். இரயில் கட்டணங்களையும் உயர்த்த வேண்டாம்.

ஏற்கெனவே விலைவாசி உயர்வு முதல் சிலிண்டர் விலை உயர்வு வரை நம் நடுத்தரக் குடும்பங்கள் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது கவலையை மேலும் அதிகரித்திட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்!

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## வேலூர் – காட்பாடி ரயில் நிலையம் மற்றும் சாலையின் இருமருங்கிலும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## வேலூரில் ரூ.198 கோடி மதிப்பிலான அரசு பல்நோக்கு மருத்துவமனையை முதல்வர் திறந்து வைத்தார்!

**வேலூர், ஜுன் 27 -**

**வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் கள ஆய்வு மேற்கொள்வதற்காக சென்னையிலிருந்து ரயில் மூலம் காட்பாடி சென்றடைந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.**

**வேலூரில் ரூ.198 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு பல்நோக்கு மருத்துவமனையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.**

வேலூர், திருப்பத்தூர் மாவட்டங்களில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரு நாட்கள் (25, 26) கள ஆய்வு மேற்கொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

வேலூரில் 198 கோடி ரூபாய் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு பல்நோக்கு மருத்துவமனையை திறந்து வைத்த முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள். சேர்க்காட்டில் கட்டப்பட்டுள்ள தாலுகா மருத்துவமனை, 9 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

மேலும், அணைக்கட்டில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலையை திறந்து வைத்தார்.

பின்னர், திருப்பத்தூர் சென்று அங்கு அமைக்கப்பட்டுள்ள கலைஞர் சிலையையும் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, நேற்றைய தினம் (26) ஜோலார்பேட்டை அருகே பொன்னேரியில் நடைபெறும் அரசு விழாவில் கலந்துகொண்டு, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டிய முதலமைச்சர், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார். 25 ஆயிரம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

இந்நிலையில், இந்நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக சென்னை சென்ட்ரலில் இருந்து காட்பாடிக்கு ரயில் மூலம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் புறப்பட்டுச் சென்றார்.

சென்ட்ரல் ரயில் நிலையத்தில் முதலமைச்சருக்கு தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

**காட்பாடி ரயில் நிலையத்தில் சிறப்பான வரவேற்பு!**

இதனைத் தொடர்ந்து காட்பாடி சென்றடைந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, அங்கும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அமைச்சர் ஆர்.காந்தி, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், வேலூர் மத்திய மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான நந்தகுமார், மேயர் சுஜாதா ஆனந்தகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.கார்த்திகேயன், ஈஸ்வரப்பன், அமலு விஜயன், துணை மேயர் சுனில்குமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முகமது சகி உள்ளிட்டோர், புத்தகம், பூங்கொத்து, பொன்னாடை கொடுத்து முதலமைச்சர் அவர்களை வரவேற்றனர்.

இதனையடுத்து, காட்பாடி சித்தூர் சாலையில் இருபுறமும் மக்கள் வெள்ளத்தில் முதலமைச்சர் பயணம் மேற்கொண்டார்.

அப்போது, செண்டை மேளம், தாரை தப்பட்டை முழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.



**சாலையில் நடந்து சென்ற முதல்வர்**

வேலூரில் சாலையில் இறங்கி நடந்து சென்று பொதுமக்களின் உற்சாக வரவேற்பை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

அப்போது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கை குலுக்கியும், செல்ஃபி புகைப்படம் எடுத்துக் கொண்டும் பொதுமக்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.